தொகுதி-௫௭ : : பகுதி-௩ — Vol. 57 : : No. 3

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1992
பிலவ—ஆனி
JUNE — 1961

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 13—7—61)

உள்ளுறை

1 உலகச் சமயங்கள் 65

இ. பழநியப்பன், மதுரை.

2 குறிப்பு வினையும் பெயரும் 73

மா. இளையபெருமாள், எம். ஏ., எம். லிட்.,

3 இளம்பூரணர் எழுத்துரை 76

ஆ. சிவலிங்கனார், மயிலம்.

4 வழுக்காத்தல் 83

வித்துவான் கு. மா. திருநாவுக்கரசு

5 பொன் மொழிகள் (மு. வ.) 88

6 சங்கச் செய்திகள் 91

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L C.

2. திரு. சித்தாந்தகலாநிதி. பேராசிரியர். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D. சென்னை.

4. திரு. பேராசிரியர், பி. சேதுமுத்து. M. A. B. D.

5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.

6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

7. திரு. இ. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்

8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி- ருஎ Vol. 57	திருவள்ளுவர் ஆண்டு 1992 பிலவ — ஆனி 1961 — June	பகுதி. ந No. 3

உலகச் சமயங்கள்

கி. பழநியப்பன், மதுரை.

8. இந்து சமயம்

57 ஆம் தொகுதி, 5-ஆம் பக்கத் தொடர்ச்சி.

உலகிலுள்ள சமயங்களில் மிகப் பழமையானது இந்து சமயம். மற்றச்சமயங்கள் தோன்றிய காலம் என்ன, அவைகளைத் தோற்றுவித்தவர்கள் யாவர் என்பவைகளைக் கூறிவிடலாம். ஆனால் இந்து சமயத்திற்கு மட்டும் அவ்வாறு கண்டறிந்து கூற இயலாது, ஏனெனில் அதுவரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டதே காரணமாகும். மேலும் கிறித்துவ சமயத்தினருக்குள்ள பைபிளைப் போன்றும் முகமதியர்களுக்குள்ள குரானைப் போன்றும் சமயக்கொள்கைகளை வரையறை செய்யக்கூடிய ஒரே நூல் இந்து சமயத்திற்குக் கிடையாது. இத்தகைய அமைப்பே இந்து சமயத்தின் சிறப்பியலாகும் என்று மகாத்மா காந்தி கூறியுள்ளார். இவ்வாறு கொள்கைகள் வரையறை செய்யப்படாமல் இருப்பதால்

தான் இந்து சமயம் காலத்திற்கு ஏற்றவாறும், அறிவு வளர்ச்சிக்குத் தக்கவாறும் வளர்ச்சியடைந்தும், மாற்றமடைந்தும் வருகின்றது என்பது அவருடைய சீரிய கருத்தாகும்.

உண்மையில் இந்து சமயம் என்றால் என்ன என்பதைக் கூறுவது மிகவும் கடினமாகும். மரம் என்ற சொல் ஒரு குறிப்பிட்ட மரத்தை மட்டும் குறிப்பதன்று தென்னை, மா, பலா, வேம்பு முதலிய எல்லாவகை மரங்களையும் உள்ளடக்கிய ஒரு சொல்லாகும். அதுபோன்று "இந்து சமயம்" என்பது பலவேறுபட்ட மதக்கொள்கைகளை உள்ளடக்கிய ஒரு சொல்லாகும், சைவம், வைணவம், மத்வம் முதலிய பல மாறுபட்ட தத்துவக் கொள்கைகளை உடையதும், பல்வேறு உருவங்களைப் பல்வேறு பெயர்களுடன் தெய்வங்களாக வணங்குவதும், உயிர்ப்பலி கொடுத்தும் உயிர்ப்பலி நீக்கியும் வழிபாடுகள் செய்வதும் போன்ற பலவகைச்செயல்கள் அனைத்தும் இந்து சமயத்தின் பெயரால் நடைபெறுவனவாகும். ஆகவே இந்து சமயத்தை ஆதியில் தோற்றுவித்தவர் யார் என்பதைத் தெரிந்து கொள்ளமுடியாத நிலையில், இந்நாட்டில் அவ்வப்பொழுது தோன்றி அதைப்போற்றி வளர்த்து வந்த அருட் செல்வர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதே பயனுடையதாகும்.

இந்தியாவிற்குள் வந்து குடியேறிய ஆரியர்களுடைய மதக்கொள்கையை ஆரியசமயம் என்று கூறலாம். ஆரியர்கள் வருவதற்கு முன் இந்நாட்டில் வாழ்ந்த பழங்குடி மக்களாகிய திராவிடர்கள் தங்களுக்கே உரிய ஒருவகைச் சமயக்கொள்கைகளை உடையவர்களாக இருந்தனர். நாளடைவில் ஆரிய, திராவிட சமயக்கொள்கைகள் ஒன்றுடன் ஒன்று கலந்து ஒன்றுபட்டு, எது எதைச் சார்ந்தது என்பதை அறிந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு இன்று இந்து சமயம்

என்ற பெயரால் இந்நாட்டில் வழங்கி வருகின்றது என்பதை டாக்டர் இராதாகிருட்டினன் போன்ற அறிஞர்கள் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளனர்.

ஆரியர் சமயத்திற்கு மூலநூல் ருக், யசுர், சாமம், அதர்வண மென்னும் நான்குவேதங்களாகும். உலகில் ருக்வேதமே மிகப் பழமையான தொகுப்பு என்று பேராசிரியர் மாக்சுமுல்லர் கூறுகின்றார். ஆரியர்கள் இந்நாட்டிற்குத் தங்களுடன் புதிதாகக் கொண்டுவந்த பொருள்களில் வேதங்களே மிக முக்கியம் வாய்ந்த பொருள்களாகும். ருக், யசுர், சாமம் ஆகியமூன்று வேதங்களின் கருத்துக்களும் நடையும் ஏறக்குறைய ஒரே மாதிரியாகவே அமைந்துள்ளன. அவைகளில் மிக முக்கியம் வாய்ந்தது ருக் வேதமாகும். யசுர் சாமவேதங்கள் சமயச்சடங்குகளை நடத்துவதற்கு மிகவும் பயனுடையவாகும். வேத காலத்தில் தெய்வங்களுக்கு மிக விருப்பமானது உயிர்ப்பலியிடுவது என்றேகருதப்பட்டது. ஆரிய திராவிட சமயக்கலப்பிற்குப் பின்தோன்றியதே அதர்வண வேதம், அக்கால அறிஞர்களும் விஞ்ஞானிகளுமான முனிவர்களின் சிந்தனையின் பயனாய்த் தோன்றியதே உபநிடதங்களாகும். இன்று இந்து சமயத்திற்கு ஓர் இணையற்ற கருவூலமாக விளங்குவது உபநிடதங்களே, ஆதிமுதல் ஆரிய சமயம் தன் கொள்கைகளைக் காலத்திற்குத்தக்கவாறு படிப்படியாக மாற்றிக்கொண்டும். வெளியிலிருந்து வரும் புதிய கொள்கைகளைப் படிப்படியாக ஏற்றுத் தனதாக்கிக் கொண்டும், வளர்ச்சிபெற்று இன்று இந்து சமயமாக விளங்குகின்றது. இனி இச்சமயத்தை உருவாக்கிய சிற்பிகளைத் தெரிந்துகொள்வோம்.

வியாசர்

சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் பராசரர் முனிவருக்கும் சத்தியவதி அம்மையாருக்கும் மகனாகத்தோன்றினர்

வியாசர். அவர் கரிய நிறமுடையவராக இருந்தபடியால் அவரைக் கிருட்ணத்வைபாயனர் என்று அழைத்தனர். அவரிடம் இயற்கையாகக் கவித்திறன் விளங்கியது. நீண்ட தவச் சிந்தனையின் பயனுகப் பலவாறு தொடர்பற்றுக் கிடந்த ஆரிய வேதங்களை ஆய்ந்து தொகுத்து ருக், யசுர், சாமம், அதர்வணம் என நான்காகப் பிரித்துத் தம் சீடர்களுக்கு ஓதுவித்துப் பின் அவ்வாறு வழி வழியாக ஓதி வழங்கச் செய்தார். அவ்வேதப்பொருட்கள் அனைவருக்கும் விளங்கும்படியாக அமைத்து மகாபாரதம் எனும் காவியத்தை அருளினுர். இணையற்ற இல்லறத்துறவியாகிய வியாசர் இறுதியில் காசிநகரில் வியாசகாசி எனும் இடத்தில் முத்தி பெற்ருர்.

சங்கரர்

காலடி என்னும் ஊரில் சிவகுரு என்ற நம்பூதிரிக்கு மகனுகப் பிறந்தவர் சங்கரர். ஆனுல் சிறு வயதிலேயே தந்தையை இழந்தார். விதவையான தாயே அவரை அன்பாக வளர்த்து வந்தாள் மகனுக்கு இளமையிலேயே வேத வேதாந்தங்களை ஓதுவிக்கச்செய்தாள். சங்கரரும் ஆர்வத்துடன் கற்றுத்தேர்ச்சி பெற்ருர். தாய்க்கு மட்டும் ஒரு மனக்குறை இருந்துவந்தது. சங்கரரின் சாதகப்படி அவருக்கு வாழ்நாள் சுருங்கியது (அர்ப்பம்) என்பதை அறிந்து மனவேதனையுடனிருந்தாள். ஆகவே மகனுக்கு விரைவில் திருமணத்தை முடித்துப் பேரன் பேத்திகளைக் காணவேண்டுமென்ற எண்ணம் மிகுந்தது. ஆனுல் சங்கரரோ துறவு பூண்டு வேத விசாரணை நடத்த வேண்டுமென்ற எண்ணத்திலிருந்தார். இது தாய்க்குப் பெருங் கவலையைக் கொடுத்து வந்தது.

ஒருநாள் தாயும் மகனும் ஆற்றிற்கு நீராடச்சென்றனர். நீராட ஆற்றில் இறங்கிய சங்கரரின் காலை ஒருமுதலை பற்றிக்

கொண்டது. சங்கரர் தாயைக்கூவி அழைத்து "அம்மா, முதலை என்னைப் பிடித்துக்கொண்டது. நான் இறக்கப் போகின்றேன். நான் துறவு கொள்வதாக இருந்தால் ஒரு வேளை உயிர் தப்பலாம். உன்விருப்பம் என்ன?" என்று கேட்டார். பெற்றமனம் என்ன செய்யும்? அலறியடித்துக் கொண்டு, "மகனே நீ உயிருடன் இருந்தால் போதும். நீ துறவு பூண்டு வாழ், நான் அதற்குச் சம்மதிக்கின்றேன்" என்ருள். முதலையும் காலைவிட்டது. சங்கரரும் தெய்வச் செயலாய் உயிர் தப்பினர். நல்லதொரு குருவை நாடி வீட்டை விட்டு வெளியேறினர். நாடெங்கும் பல நாட்கள் சுற்றி இறுதியில் நருமதை நதிக்கரையில் கோவிந்த பகவத் பாதர் என்ற ஒரு துறவியைக்கண்டார், அவர் பேராற்றல் மிக்க பெரியார் என்பதைத் தெரிந்து தம்மைச் சீடனுக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சங்கரர் கேட்டுக்கொண்டார். சங்கரரின் அறிவுத் திறனைச் சோதித்துப் பகவத்பாதர் அவரைச்சீடராக ஏற்றுக்கொண்டார்

பல நாட்கள் குருவிடமிருந்து பின்பு காசிநகர் நாடிச் சங்கரர் தன் அத்வைத ஞானத்தைப் பிறருக்குக் கூறத் தொடங்கினர். பல அரிய அகண்ட ஆராய்ச்சி விளக்கங்களும் எழுதத்தொடங்கினர். அவரைப் பல சீடர்கள் நாடினர். ஒருநாள் சீடர்களுடன் கங்கையில் நீராடித்திரும்பும் பொழுது தீண்டப்படாதவன் ஒருவன் எதிர்ப்பட்டான். சீடர்கள் அவனைப்பார்த்து "விலகு விலகு" என்று கூவினர். அதற்கு அவன் 'விலகுவது யார்? விலக்குவது யார்? பிர்மம் பேதமற்றது: சாதி மதவேறுபாடற்றது எனில் விலகச் சொல்வதன் பொருள் என்ன?" என்ருன். அதைக்கேட்ட சங்கரருக்கு இவ்வாறு பேருண்மையை விளக்கியவன் சண்டாளனேனும் எனது ஆசானுவான் என்று வணங்கினர்,

சங்கரருக்கு இருபத்தைந்து வயது முடிவதற்குள் தமது அத்வைத வேதாந்தத்தை வடநாடு முழுவதும் பரப்பினர். மன்னர்களும் அறிஞர்களும் பாமரரும் போற்றினர். ஆங்காங்குச் சென்று மாற்றுக் கொள்கையுடையவர்களைக் கண்டு சபைகள் கூட்டி அவர்களுடன் வாதாடி அத்வைதக் கொள்கையை நிலைநாட்டி வந்தார். ஒருசமயம் பாரதி யெனும் பெண்ணுடன் வாதாடுவதற்காகத் தம்முடலை விட்டு ஓர் அரசன் உடலில் புகுந்து சிற்றின்ப ஆராய்ச்சியில் ஈடுபட நேர்ந்தது. இவ்வாறு சங்கரர் பல இடர்களை யெல்லாம் வென்று தம் சீடர்களுடன் சிருங்கேரியில் சில நாளிருந்தார்.

பிறகு தம் அன்னையைக் காணக் காலடி வந்தார். மரணப்படுக்கையில் இருந்த அன்னை, மகனைக் கண்டு வாழ்த்தி உயிர்நீத்தாள். சங்கரர் அன்னைக்கு ஈமக்கடன் செய்ய முனைந்தார். வைதிக நம்பூதிரிகள் எதிர்த்தனர்; துணை செய்ய மறுத்தனர். சங்கரர் வீட்டுக்கொல்லையிலேயே தாயைப் புதைத்து இறுதிக்கடனை முடித்தார். தம்முடைய அத்வைதத்தைப் பரப்புவதற்குச் சங்கரர் பூரியில் கோவர்த்தன மடமும் காஞ்சியில் காமகோடி பீடமும் அமைத்தார். பதரிநாராயணத்திலும் ஒரு மடம் கண்டார். ஆதியில் சிருங்கேரியில் கண்ட மடமும் உட்பட நான்கு மடங்களும் இன்றும் சங்கரர் காட்டிய வழி நின்று செயலாற்றி வருகின்றன.

முடிவில் சங்கரர் கேதாரநாதில் மூலநோய் கண்டு தம் பூதவுடலை விட்டு நீத்தார். "பிர்மம் ஒன்று. உன்னைப் பிர்மம் என்று அறி. பிர்மமாகிய உன்னையே அனைத்திலும் காண். எதிலும் விருப்பு வெறுப்பின்றி எங்கும் நிறைந்த, மாசற்ற இன்பமயமான ஆன்மாவை எப்பொழுதும் நினைந்து

உபாசிப்பவர் எங்கும் நிறைந்து அழிவற்றவராவர்'' என்பதே சங்கரர் கூறிய வேதாந்தமாகும்.

இராமாநுசர்.

இராமாநுசர் . ஆளவந்தார் பரம்பரை. இவர் தந்தை ஆசூர் கேசவப்பட்டர். இளவயதிலேயே தந்தையை இழந்த இராமாநுசர் தம் உறவினர் கோவிந்தப்பட்டருடன் காஞ்சிபுரஞ்சென்று யாதவப்ரகாசரிடம் வேதாந்தம் பயின்றார். விரைவில் குருவை மிஞ்சிய சீடராய்ப் பல அரிய புதிய விளக்கங்களைக் கூறத்தொடங்கினர். குருவின் புகழைவிட சீடனின் புகழ் எங்கும் பரவலாயிற்று. அதனால் பொறாமையுற்ற குரு இராமாநுசருக்குப் பல இடர்களைச் செய்து அவரைக் கொல்லவும் முயற்சி செய்தார். பின்பு இராமாநுசர் குருவைவிட்டு நீங்கித் திருமணம் செய்து கொண்டு இல்லறத்தில் ஈடுபட்டார்.

அச்சமயம் பாட்டனாராகிய ஆளவந்தார் இராமாநுசரின் அறிவு ஆற்றல் வீணாகக்கூடாது என்று எண்ணி நோய்வாய்ப்பட்டிருந்த தம்மைச் சீரங்கத்தில் வந்து பார்க்குமாறு அழைப்பு அனுப்பினர். இராமாநுசர் அதைச்சிரமேற்கொண்டு விரைந்து சீரங்கம் வந்து சேர்ந்தார். ஆனால் அவர் வருவதற்கு முன்பாகவே ஆளவந்தார் உயிர் நீத்தார். இராமாநுசர் வந்து ஆளவந்தார் உடலைப் பார்த்தபொழுது அவருடைய விரல்களில் மூன்று மடங்கியிருப்பன கண்டு வியந்தார். அதன் காரணத்தையுணர்ந்தார். ஆளவந்தார் மனத்திலுள்ள மூன்று எண்ணங்களைத் தம்மிடம் கூற விரும்பியதன் அறிகுறியே அவைகளென எண்ணினர். பிரமசூத்திரம், சகசரநாமம், திருவாய்மொழி ஆகிய மூன்றிற்கும் அகண்ட விளக்கவுரை எழுதவேண்டுமென்பதே அவ்விருப்பம். இராமாநுசர் அதைச் செய்து முடிப்பதாக வாக்

குறுதி எடுத்துக் கொண்டார். உடனே வியக்கத்தக்க முறையில் மடங்கி இருந்த மூன்று விரல்களும் விரிந்து விட்டன. அதன்பின் இராமாநுசர் தெய்வப்பணியில் ஈடுபட எண்ணி இல்லறத்தைவிட்டுத் துறவு பூண்டு யதிராசன் எனத் தம் பெயரை மாற்றிக்கொண்டார். திருக்கோட்டியூர் நம்பியிடம் தாம் பெற்ற உபதேச மந்திரத்தைக் குரு ஆணைக்கும் மீறிக் கோபுரத்திலேறி, "ஓம் நமோ நாராயணாய" என்று கூறி உலகறிய விளங்கச் செய்தார். அவ்வாறு குருவின் ஆணையை மீறியதால் ஏற்படும் தெய்வ தண்டனையையும் பொருட்படுத்தாது மற்றவர்கள் உய்ய வழி தேடிய பெருந்தகையார் என்று எல்லோராலும் பாராட்டப்பெற்றார்.

இராமாநுசரின் புகழைக்கண்டு பொறாமை கொண்ட சிலர் அவருக்குப் பல இடர்களைச் செய்தனர். சிவநெறியில் பற்றுமிகக் கொண்ட குலோத்துங்கசோழனும் அவர் உயிருக்கு இன்னல் விளைவிக்கத் துணிந்தான். இராமாநுசர் தந்திரமாக நாட்டைவிட்டுத் தப்பிச்சென்று மைசூரிலுள்ள சாளக்கிராமம் போய் அங்குப் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தார். குலோத்துங்கன் இறந்தபின்பே அவர் சீரங்கம் திரும்பிவந்து அங்கு ஆழ்வார்களுக்குக் கோயில் அமைத்தார். பல சீடர்களைத்தயாரித்துத் தம்வேலையைத்தொடர்ந்து செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தபின் தமது 120 ஆவது வயதில் இவ்வுலகை விட்டு மறைந்தார். இராமாநுசரின் தத்துவம் விசிட்டாத்வைதம் எனப்படும். அதன்படி கடவுள் ஒன்றே. அப்பரம்பொருள் நாராயணனேயாகும் சீவன் வேறு, பிர்மம் வேறு. நாராயணனிடம் அடைக்கலம் புகுவதே உய்யும் வழியாகும்.

(தொடரும்)

குறிப்புவினையும் பெயரும்

[மா. இளையபெருமாள், எம். ஏ; எம். லிட்]

தொல்காப்பியர் பெயரியலில் பெயர்களை உயர்திணைக்குரியன, அஃறிணைக்குரியன, பொதுவாக வருவன என்று மூவகைப் படுத்திவிட்டு அவையாவை என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். அவ்வாறு காட்டும்போது அவர் எடுத்தோதும் பெயர்களில் அவன், அவள், அவர், அது, அஃது, அவை, இவன், இவள், இவர், இது, இஃது, இவை, யாவன், யாவள், யாவர், யாது, யாவை, உள்ள, இல்ல ஆகியன சிந்திக்கற்குரியன. இப்பெயர்களின் தன்மைகள் வினையியலில் தொல்காப்பியர் குறிப்பு வினைக்குக் கூறும் இலக்கணத்திற்கு ஒத்து வருவதால் அவர் வகுக்கும் முறையில் வினைகளெல்லாம் பெயரில் அடங்காவோ என்னும் ஐயம் ஏற்படுகின்றது.

மேற்காட்டப்பட்ட பெயர்களின் முதனிலைகளாக அ. இ. உ. ஆகியசுட்டு, யாவினு, உண்மை செப்பும் உள், இன்மையுரைக்கும் இல் ஆகியன காணப்படுகின்றன. அவற்றுள் சுட்டும் வினுவும் ஆகுபெயராய் இடத்தையோ பண்பையோ உணர்த்தாது சுட்டாகவோ, வினுவாகவோ மட்டும் பொருள் படும்போது, பொருளின் பண்பைக் குறிப்பதாகும்; எனவே பண்புச் சொற்களாக அவை அடங்கும். பண்புச் சொற்கள் குறிப்புவினையின் அடிப்படையாக வரும் என்பதனைத் தொல்காப்பியர் 'பண்பினனும்' என்று உயர்திணைக் குறிப்புவினையிலும், 'பண்புகொள்கிளவியும்' என்று அஃறிணைக் குறிப்புவினையிலும் குறிப்பிடுகிறார். இனி அவன், யாவன் முதலியவற்றை அந்த இடத்திலுள்ளவன்

அல்லது அந்தத் தன்மையையுடையவன் என்றும் எந்த இடத்திலுள்ளவன் அல்லது எந்தத் தன்மையையுடைய வன் என்றும் பொருள் கொண்டால் இடம், உடைமை என்ற இரண்டின் அடிப்படையிலும் அவை பொருள்களைக் குறிக்கின்றன என்பது பெறப்படும். இவை இரண்டின் அடிப்படையிலும் குறிப்புவினைகள் தோன்றும் என்று

> அதுச்சொல் வேற்றுமை உடைமையானும்
> கண் என் வேற்றுமை நிலத்தினானும்

என்ற வரிகளால் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். உள்ள, இல்ல ஆகிய பெயர்களின் முதனிலைகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்புவினை தோன்றும் என்று 'இன்று இல ...... என்னும் கிளவியும், ... உளஎன்கிளவியும்' என்னும் சொற்களால் உணர்த்துகிறார். எனவே மேற்குறிப்பிட்ட பெயர்களெல்லாம், குறிப்புவினைக்கு அவர் கூறும் அடிப் படையில் தோன்றின என்பதை உணர்கிறோம்.

முதனிலைகளைப் போலவே, விகுதிகளைப் பொறுத்த அளவிலும் பெயர்களுக்கும் வினைகளுக்கும் வேறுபாடில்லை என்பது இரண்டாவது கருதற்குரியதாகும். தன்மை முன் னிலை விகுதிகள் இப்பெயர்களில் காணப்படவில்லை என்ப தால் அதனைக் குறிப்பு வினைக்கும் பெயருக்கும் வேறுபா டாகக் கூறுதல் பொருத்தமற்றதாகும். சொற்கள் அவை குறிக்கும் பொருளுக்கும் அவற்றின் ஒலி வசதிக்கும் பொருந் தும் முறையிலேயே அமையுமே தவிர, இயந்திர முறைப் பாகுபாட்டிற்குத் தகுந்த முறையில் அமைவதில்லை. உதா ரணமாகத் திறப்பல் என்ற எதிர்கால'வினைக்கு இயந்திர முறைப் பாகுபாட்டிற் கொத்துத் 'திறந்தல்' என்று இறந்த காலச் சொல் காணப்படவில்லை என்ற காரணத்தால் 'அல்' தன்மை விகுதியில்லை என்று கூறுவதில்லை. அதைப்

போலவே அரசன், அரசி, அரசர் ஆகிய சொற்களின் இயந் திரப் படைப்பாக அஃறிணை ஒன்றன்பாலையும் பலவின் பாலையும் குறிக்கும் சொற்கள் காணப்படவில்லை என்னும் காரணத்தைக் கொண்டு அவை பெயரல்ல என்றும் சொல்வ தில்லை. பெண்பாற் சொல் காணப்படாத வேந்தன், வேந்தர் ஆகிய சொற்களின் முதனிலை வேந்திர் எனவும், அவ்வாறே யா என்னும் முதனிலை யாவிர் எனவும், முன்னிலை விகுதி பெறுவதையும் காண்கிறோம். உயர்திணை முப்பாற்கும் உரிய யார் என்னும் வினாச்சொல்லை, உயர்திணைக்குறிப்பு வினையாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவதும் முக்கியமா னது. இன்னும் உள்ள, இல்ல ஆகியவற்றின் முதனிலை கள் உளேன், உளை, உளேம், உளீர், இலேன், இலை, இலேம், இலீர் எனத்தன்மை முன்னிலை விகுதிகளை ஏற்கின் றன. இன்னும் 'ஆ ஓ ஆகும் பெயருமாருளவே' என்ப தற்குச் சான்றுகளாக "வில்லோன், தொடியோள், நல் லோர்" என உரையாசிரியர்கள் காட்டும் உதாரணங்களை, உடைமையானும் பண்பினானும் தோன்றிய குறிப்பு வினை கள் என்றும் கூறமுடியும்.

இவ்வாறு பாலறி கிளவிகளை ஈற்றில் கொண்ட பெயர்ச் சொற்களை 'வினைகள்' என்று பாகுபடுத்துவதில் இடர்ப் பாடுகள் ஏற்படுவதைக் காண்கிறோம்.

57ஆம் தொகுதி, 28-ஆம் பக்கத் தொடர்ச்சி

இளம்பூரணர் எழுத்துரை

(ஆ. சிவலிங்கனுர், மயிலம்)

II. உரைக் குறிப்புக்கள் (தொடர்ச்சி)

உயிர் மயங்கியல்

208 உயிர்முன் ………… திரியாது

"இடைமிக்க வகரத்தினை 'நெறியியல்' (161) என்ற இலேசினுன் இரட்டுதல் கூறினமையின் அது நிலைமொழித்தொழில் என்பதுவே கூறப்பட்டது".

'அவ்வாடை' இதில் அகர நிலைமொழி முன்னர் ஆகார வருமொழி வர இடைமிக்க வகரம் இச்சூத்திர விதிப்படி மிக்கதாகவும், பின்னர் அவ்+ஆடை = அவ்வாடை எனப் புணருமிடத்து மிக்க வகரம் அவ் என்பது நிலைமொழியாகி விட்டமையின் 'நெறியியல்' (161) என்ற இலேசினுல் இரட்டியதாகவும் கொள்ளுதலின் இவ்வாறு எழுதினுர்.

211 "அன்னஎன்னும்…இயல்பென மொழிப"

இந்நூற்பாவில் 'அன்ன' என்பதற்கும் 'செய்யிய' என்பதற்கும் "வினையெஞ்சியகிளவியும்" (205) என்னும் நூற்பாவிலும், 'பல' என்பதற்கு "அகரவிறுதி" (204) என்னும் நூற்பாவிலும் எய்தியவை விலக்கப்பட்டன. மற்றையன எய்தாதது எய்துவித்தன.

இந்நூற்பாவில், விளிநிலைக்கிளவியும், பலவற்றிறுதிப் பெயரும் பெயர்ச்சொற்கள். இவற்றுள் விளிநிலைக்கிளவி

திரிந்தவடிவம், பல என்பது இயல்புவடிவம், ஆதலின் திரிந்தவடிவம் பிற்கூறப்பட வேண்டுவது. அதனுல் "விளிநிலைக்கிளவியாகிய .... வாராத கொற்றன் எனவரும்" என உரையாசிரியர் எழுதினுர்.

வியங்கோட்கிளவி இயற்சொல்; செய்ம்மன என்பது திரிசொல். இயற்சொல்லாகிய வியங்கோட்கிளவி முன் வைக்கப்படல் வேண்டும். மாறுபடவைத்தலின் உரையாசிரியர், "உரையிற்கோடல் என்பதனுல் ......பெறப்பட்டது" என்றெழுதினுர்.

அம்ம என்பது பொருளற்ற உரையசைச்சொல் ஆதலின் 'பல' என்ற பொருள் உள்ள பெயர்ச் சொல்லுக்குப் பின் வைக்கப்படல் வேண்டும். அதனுல் உரையாசிரியர், "பலவற்றிறுதி.........முற்றுவினைக்குறிப்பு" என எழுதினுர்.

214 "பலவற்றிறுதி .... மொழியான"

"பலாஅஞ் சிலாஅம் என்மனுர் புலவர் என வரும். இதன் சொல்நிலை பல சில என்னும் செவ்வெண்"

பலாஅஞ் சிலாஅம் என்பனவற்றின் முன்னைய சொல்நிலை பலவும் சிலவும் எனப் பொருள்படும் பல சில என்பனவாகும். செவ்வெண் என்பது உம்மை தொகுத்துக் கூறப்படுவது.

216 "வல்லெழுத்தியற்கை .... தோன்றும்"

"தோன்றும் என்றதனுல் அகரம் கெட லகரம் ஆய்தமும் மெல்லெழுத்துமாய்த் திரிந்து முடிதல் கொள்க. பஃறுனே, பன்மரம், சிஃறுழிசை, சின்னூல் எனவரும்."

பஃறுளை, சிஃறுழிசை என்பனவற்றில் நிலைமொழி பல சில என அகரவீறாகக் கொண்டமையால் லகர வீறுபற்றிய

தகரம் வரும்வழி ஆய்த மாகலும்
புகரின் றென்மனர் புலமை யோரே (370)

என்ற நூற்பாவின்படிக் கொள்ளாது ஈண்டுத் 'தோன்றும்' என்றதனுற் கொண்டார்.

219 மகப்பெயர்.........சாரியை''

"சாரியைப் பேறு வரையாது கூறினவழி" = சாரியைப் பேற்றினை வன்கணம் மென்கணம் இடைக்கணம் உயிர்க்கணம் ஆகிய நான்கனுள் இன்னகணத்தது என வரையறை செய்யாது கூறினவிடத்து.

224 "உம்மையெஞ்சிய.........அகரம் மிகுமே"

"இன்னும் அதனுனே எழுவாய் முடிபிற்கும் பெயரெச்சத்திற்கும் அகரப்பேறு கொள்க. இராஅக் கொடிது, இராஅக்காக்கை எனவரும்"

இஃது அல்வழி முடிபாதலின்,

சுறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக்கிளவி (227)

என்ற வேற்றுமை முடிபு பற்றிய நூற்பாவில் அடங்காமையின் இங்கெழுதினர்.

245 "புளிமர.........சாரியை"

"சாரியைப் பேற்றிடை எழுத்துப்பேறு கூறியவதனுல் அம்முப்பெற்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க"

புனியென வரூஉம் (242) எனவும், வளியென (243) எனவும் வரும் நூற்பாக்களும் இந்நூற்பாவும் சாரியைப்பேறு கூறிவருதலின் இந்நூற்பாவுக்கு முன்நூற்பாவில் (244)

எழுத்துப்பேறு கூறினமையால் அம்முப்பெற்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

247 "வல்லெழுத்து..........வழக்கத்தான"

கூதாளி, கணவிரி என்பன நிலைமொழிகள்.

262 "ழகரவுகரம்..........ஆவயினான".

"இடனுடைத்து என்றதனால் இது செய்யுளிடத்தெனக் கொள்க" ழகரவுகரம் நீடல் உடைத்து என்றது 'இடன்' என்ற இலேசினால் அவ்விடம் செய்யுளிடம் எனக்கொள்க.

271 "அக்கேன்.........வழக்கத்தான"

"தக்கவழியறிதல் என்றதனால் சாரியை பெற்றவழி நிலைமொழி னகரம் விலக்குண்ணாது நிற்றலும், முன் மாட்டேற்றால் விலக்குண்ட வல்லெழுத்துக் கெடாது நிற்றலும் கொள்க. எ.டு: ஊனக்குறை."

மாட்டேற்றால் விலக்குண்ட வல்லெழுத்துக் கெடாது நிற்றலாவது, 'ஊ' என்பது 'ஆ' வோடு மாட்டேற்றப்பட்டதாதலின் அவ் 'ஆ' என்பதற்கு "மாமரக்கிளவியும் ஆவும் மாவும்" (232) என்ற நூற்பாவில் "'அகரம்' வல்லெழுத்தவையவண் நிலையா" என விலக்கப்பட்ட வல்லெழுத்து ஈண்டுக் கெடாது நிற்றலாம்.

272 "ஆடூஉ மகடூஉ .... மானமில்லை"

"மானமில்லை என்றதனால் இன்பெற்றவழி மேல் இலேசினான் எய்திய வல்லெழுத்து வீழ்க்க."

மேல் என்றது, "குற்றெழுத்திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும் நிற்றல் வேண்டும் அகரக்கிளவி" (268) என்ற நூற்பாவை. அதிலுள்ள இலேசாவது 'நிற்றல்' என்பது.

274 தேற்றஎகரமும் ……… வல்லெழுத்து மிகா''

''மேற்கூறியற்கை வல்லெழுத்து மிகா என்றதனுல் வந்தது கண்டு வாராததுணர்க என்ற தந்திரவுத்தியால் வல்லெழுத்து மிகும் என்பது கூறப்பட்டதாயிற்று.''

இந்நூற்பாவின் முன்னே யாண்டும் எகர ஒகர வீற்று முன்னிலை வினைச்சொற்கு வல்லெழுத்து மிகும் என்று கூறப்படவில்லை. அப்படியாகவும் 'மேற்கூறியற்கை வல்லெழுத்து' என்றமையால் இதில் சொல்லியதைக் கண்டு இவ் விதி முன்னர்ச் சொன்னதாக உணர்தல் வேண்டும்.

''இயற்கை யென்றதனுல் அம்முன்னிலை வினைகளை அள பெடையாக நிறீஇக் கொள்க''

பின்னர் 'எகர ஒகரம் பெயர்க்கிருகா' (273) எனவும்

'ஏயென் இறுதிக் கெகரம் வருமே' (278) எனவும் விதித்தலினுலும் வினையாதலினுலும் இவ்வாறு அள பெடையாக நிறீஇக் கொள்க என்ருர்.

277 ''வேற்றுமை………………அற்றே''

''வேக்குடம்: வே+குடம்: வே என்பது முதனிலைத் தொழிற் பெயர். வேதலையுடைய குடம் எனப் பொருள் கொள்க.

285 ''பனையின்…………ஆவயினை''

''விச்சாவாதி: விச்சை+வாதி. வித்தையில் வல்லவாதி; வேற்றுமைத் தொகை. இதுவே விச்சையும் அதில் வல்ல வாதியும் எனப் பொருள்படுமாயின் உம்மைத் தொகையாகி அல்வழி முடிபுகொள்ளும். அல்வழி முடிபைச் ''செய்யுள் மருங்கின் வேட்கை'' (289) என் னும் நூற்பாவில் எழுதிக் காட்டியுள்ளார்.

புள்ளி மயங்கியல்

299 "நகரவிறுதி............அற்றே"

"இது நகர வீறு மேற்கூறிய கணங்களோடு ஒருவழி முடியுமாறு கூறுதல் நுதலிற்று"

அடுத்த நூற்பா வேற்றுமைக்கு வேறு முடிபு கூறுதலின் இங்கு ஒருவழி என்றது அல்வழியை எனக் கொள்க.

302 "ஆவயின்.. ....உரித்தே"

"ஞகார வீற்றோடு நகாரவீறு ஒத்த முடிபிற்றுதலின் உடன் கூறப்பட்டது."

ஞகாரவீறு கூறிப் பின்னர் ணகார வீறு கூறப்பட வேண்டும். இடையில் நகார வீறு கூறப்பட்டதற்குக் காரணம் கூறுவார் இவ்வாறு கூறினர்.

303 "ணகாரவிறுதி.............. ..பொருட்கே"

இதன் அல்வழி முடிபு தொகைமரபில் "மொழி முதலாகும் எல்லா எழுத்தும்" (148) என்ற நூற்பாவில் கூறப்பட்டது.

311 "மகரவிறுதி...............மிகுமே"

தன்மைப் பெயர் உயர்திணைக்கேயுரியது எனக்கொண்டமையால் நங்கை எங்கை என்பன 'உயர்திணைப் பெயர்க்கண் மகரக்கேட்டுக்கு உதாரணங்களாகக் காட்டப்பட்டன. நாம்+கை, யாம்+கை எனப்பிரிக்க.

316 "அகமென்... ....ஆவயினுன"

'அகங்கை' என்பது கை, அகம் என்பன மாறி நிற்றலின் மரூஉ முடிபாயிற்று.

334 "மன்னும் சின்னும்.....................புலவர்"

"உருபுநிலை உருபியலுள் முடியும்"

பின்முன் என்பன உருபுநிலையவாயின் உருபியலில் "புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும் (203) என்னும் புறனடை நூற்பாவில் தேருங்காலை என்றதனால் கொள்ளப்படும். பின்கொண்டான், முன்கொண்டான் என முடியும் என்க.

352 "தானும் பேனும்.....................இடனிலவே"

"தான்பேன்கோன் என்பனஉயர்திணையஃறிணையாகிய இரு திணைகட்குப் பொதுப்பெயர்களாகவும் இயற்பெயர்களாகவும் வழங்கப்பட்டன என்பதுபோதரும். இக்காலத்தில் 'தானப்பன்' என்பதும் பெயராக வழங்கிவருகின்றது. இது மிகப் பழங்காலப் பெயராகவே மரபாக வழங்கி வந்திருக்க வேண்டும். (தானம்+அப்பன், தான+அப்பன்=தானப்பன் . என வந்ததாகக் கொள்வர் இக்காலத்தில்.)

———

(சென்ற இதழ் 55-ஆம் பக்கத்தொடர்ச்சி)

சொல்விளக்கம்- 2. (ஆ)

வழுக்காத்தல்

(கு. மா. திருநாவுக்கரசு)

முன்னிதழில் ஐயவினுவில் பால்வழுவமைதி பற்றி ஆய்ந்தோம். இனி, அவை, துணிந்தவழி அமையும் வகையைப்பற்றி ஆய்வோம்.

துணிபொருளில் பால்வழுவமைதி.

ஒருவனே ஒருத்தியோ என ஐயுற்றுப் பிறகு (இரண்டிலொன்றேயெனத்) துணியுங் காலத்தில் அவ்விரண்டனுளொன்றை மறுத்து ஒன்றைத் துணிந்து சொல்லுதல் மரபல்லவா? அவ்வாறு மறுக்கும் பொழுது அல்லன் முதலிய அன்மைக் கிளவிகளுள் ஏதாவதொன்ருல் மறுக்கப்படும். அக்கிளவிகளுள் எச்சொல்லால் மறுக்கப்படும் என்பதற்குச் சேனுவரையர் தரும் விடைகளைத் துணிபொருளில் திணைவழுவமைதி பற்றி விளக்கியவிடத்தில் (56-ஆம் தொகுதி 12-ஆம் பகுதி 336-ஆம் பக்கம்) கூறியுள்ளோம். அத்திணைவழுவமைதிக்குரிய விடைகளையே பால்வழுவமைதிக்குங் கொள்க. (ஆங்குக் குற்றி, மகன் என்னுஞ் சொற்கள் உள்ள விடத்தில் ஆண், பெண் (அல்) ஒன்று, பல என்ற சொற்களை யமைத்துப் படிக்கவும்)

ஒருமையைப் பன்மை வாய்பாட்டாற் கூறுதல்.

ஒருவனே ஒருத்தியோ தன்னைப்பற்றிப் பேசும்பொழுது (தன்மையிடத்தில்) 'யான் வந்தேன்' என்றும், தன்னை நோக்கிவரும் ஒருவன் (அல்) ஒருத்தியைப்பற்றிக் குறிப்

பிடும் போது 'நீ வந்தாய்' என்றும் ஒருமைவாய்பாட்டா லுரைத்தலே இலக்கணநெறி. ஆனல் வழக்கில் என்ன காணுகின்ருேம்? ஒருவன் தன்னைப்பற்றிக் கூறும்போது ,யாம் வந்தேம்' என்றும். முன்னிலையிலுள்ள ஒருவனைப் பற்றிக் கூறும்போது நீயிர் வந்தீர் (நீங்கள் வந்தீர்கள்) என்றும் பன்மைவாய்பாட்டாற் கூறுவதைக் காண்கின்ருேம். பால் ஒருமையாயிருக்கும் போது பன்மையாற் கூறுவது வழுதானே! ஆதலால் இதற்கு இலக்கணநெறியில் இடமில்லையாயினும் உலகவழக்கில் உயர்த்திப் பேசும் மரபு காரணமாக இவ்வாறு கூறலாம் எனத் தொல்காப்பியர் பால்வழுவமைதியமைக்கின்ருர்.

> * ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
> ஒன்றினைக் கூறும் பன்மைக் கிளவியும்
> வழக்கினுகிய உயர்சொற்கிளவி
> இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல'' (27)

பன்மைச்சினைப் பெயரில் பால்வழுவமைதி

சினைப்பெயர்களாகிய அஃறிணைப் பெயர்கள் உயர்திணை முடிபைப்பெற்றுவரும் நிலையைப்பற்றித் 'திணைவழுவமைதி' தலைப்பில் ஆய்ந்தோம். 'கண்ணல்லள்', 'கண்ணல்லர்' எனத் திணைவழுவமைதியாகக் கூறிய அவ்விடத்துப் பால் வழுவமைதியும் அமைந்துள்ளதை ஈண்டுக் காண்போம். கண் என்பது பன்மைச் சினைப்பெயர். அதன் முதல் ஒருமையாக விருந்தால் அதற்குரிய முடிக்குஞ்சொல் ஒருமையாகவும் பன்மையாக விருந்தால் பன்மையாகவும் இருக்க வேண்டும் என்பது முன்பு கூறிய விதியன்ருே? அதில் கண் என்னும் பன்மைச் சினைப்பெயர் 'நல்லள்' என்னும் ஒருமைப் பெயர்கொண்டு முடிக்கப்பெறுதலால் (திணைவழுவோடு) பால்வழுவுமிருப்பதைக் காணலாம். ஆயினும் இதனைப் பால் வழுவமைதி காரணமாக ஏற்றுக்கொள்ளுமாறு தொல்காப்

---

*ஒன்றனைக் கூறும் பன்மைக்கிளவியில் திணைவழுவமைதியோடு பால்வழுவமைதியும் இருப்பதைக் காண்க.

பியர் விதி கூறியமைக்கின்றார். அவ்வாறே மூக்கு முதலிய ஒருமைச் சினைப்பெயர்கள் 'நல்லர்' என்ற பன்மையால் முடியும் வழிப்பால்வழுவமைதியாகக் கொள்க எனச் சேனாவரையர் தன்னினமுடித்தலால் அமைக்கின்றார். (நூற்பா-61)

பால்திரிந்த பெயரின் வினை-முடிபு

பழங்காலத்தில் மகடூஉப் பொருண்மைக்கண் **'பெண் மகன்'** என்னும் பெயர் வழக்காற்றில் இருந்ததைக் காண்கின்றோம். பொருளால் பெண்பாலாயிருக்க, சொல்லால் ஆண்பாலாகத் திரிந்து வந்துள்ள 'பெண்மகன்' என்னும் இச்சொல்லைத் தொல்காப்பியர், 'மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி' எனக் குறியிட்டாளுவர். சொல் வழியால் நோக்கும் போது ஆண்பாலாகவும், பொருள்வழியால் நோக்கும் போது பெண்பாலாகவுமிருக்கும் இப்பெயர் முடிக்குஞ் சொல்லைப் பெறுங்காலத்து எவ்வாறு முடியப்பெறும் என்பதே இங்கெழும் ஐயம். பொருண்மைபற்றிப் 'பெண்மகன் வந்தாள்' என மகடூஉ வினைகொள்ளுமோ? ஈறுபற்றிப் 'பெண்மகன் வந்தான்' என ஆடூஉ வினைகொள்ளுமோ? எனின், பொருண்மை பற்றி மகடூஉ வினையே கொள்ளும்; ஈறு பற்றி வரும் வினையைக் கொள்ளாது எனக் கூறுகின்றார் தொல்காப்பியர். சொல் நிலையை நோக்கி இதனைப் பால் வழுவமைதியாகக் கொள்க.

> ''மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி
> மகடூஉ வியற்கை தொழில் வயினான'' (194)

விரவுப் பெயரில் பால்வழுவமைதி

சேந்தன், முடவன் முதலியன விரவுப் பெயர்கள். இவைகள் 'ஆர்' என்னும் விகுதி பெற்றுப் பலர்பால் வினைச் சொல்லால் முடியப்பெறும் என்பதை,

> ''இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
> பலர்க்குரி யெழுத்தின் வினையொடுவருமே''

என்ற (இடையியல் 22) நூற்பாவாற் கூறுகின்றார்.

இங்குச் சேந்தன் முதலிய ஒருமைப் பெயர்களை உயர்த்தற் பொருட்டு 'ஆர்' விகுதி சேர்த்தலும் பலர்பால்வினை, முடிக்குஞ்சொல்லாக வருதலும் பால்வழுவமைதியாகக் கொள்க. இவ்வாறு விரவுப் பெயர் வருதலேயன்றி உயர் திணைப் பெயரும் "நம்பியார் வந்தார்' என வருதலை ஒன்றெனமுடித்தலாற் கொள்க எனச் சேனவரையர் கூறுகின்றார்.

ஒருமைப் பெயர் பன்மைக் காதல்

'தாய்' முதலியன ஒருமைச் சொற்கள், இத்தகைய ஒருமைச் சொற்கள் தாம் ஒருமையாய் நின்றே பன்மைப் பொருளையுணர்த்தலுமுண்டு. அதனைப் பால்வழுவமைதியாகக் கொள்க.

"ஏவலிளையர் தாய் வயிறுகரிப்ப"

ஏவலிளையர் என்பதற்குப் போர்வீரர் என்று பொருள். 'ஏவலிளையர்' என்ற பன்மைச் சொல்லோடு தாய் என்ற ஒருமைச் சொல் இயைந்து வந்துள்ளது. இங்குப் 'போர்வீரர்களைப் பெற்றெடுத்த தாய்' என்று ஒருத்தியை மட்டும் குறிக்கவில்லை. போர்க்களத்துச் சென்ற பல்லாயிரக்கணக்கான வீரர்களை ஒரு தாயா பெற்றெடுத்திருப்பாள்? அவர்களைப் பெற்றவர்கள் பலதாயர்களாக வன்றோவிருப்பார்கள்! இருப்பினும் பாடலில் '**ஏவலிளையர் தாய்** வயிறு கரிப்ப' என ஒருமையாற் கூறப் பெற்ற அச்சொல்தானே பன்மைப்பொருளையுணர்த்தி நிற்பதைக் காண்கின்றோம். இவ்வாறு பால்வழுவாக வருவதையும் தொல்காப்பியர் ஏற்றுக்கொள்கின்றார்.

> ஒருமை சுட்டிய பெயர் நிலைக்கிளவி
> பன்கைக் காகு மிடனுமாருண்டே (461)

இவ்வாறு வரும் வழுவமைதியை உயர்திணைக்கண்மட்டும் கொள்க எனச் சேனவரையர் ஏற்புழிக் கோடலால் கொள்கின்றனர்.

முன்னிலை யொருமை பன்மையொடு முடிதல்

'தலைவ' 'செல்வ' 'புலவ' முதலியன முன்னிலையொருமைப் பெயர்கள். இப்பெயர்கள் முடிக்குஞ் சொல்லைப் பெறும் வழி 'தலைவ பெறுவாய்' என்பது போலப் முன்னிலை ஒருமை வினையால் முடிதலே மரபு. ஆயினும் செய்யுளில் — குறிப்பாக ஆற்றுப்படைச் செய்யுளில்—இம்முன்னிலை யொருமைப் பெயர்கள் பன்மைச் சொல்லை முடிக்குஞ் சொல்லாகப்பெற்று வருதலுமுண்டு. இதனைப் பால்வழுமையியாகக் கொள்க. என்றும், இவ்வாறு வரும் பால்வழுவமைதி ஆற்றுப்படைச் செய்யுளுக்கு மட்டுமேயுரியது என்றும் கூறுகின்றார் தொல்காப்பியர். கூத்தராற்றுப் படையுள் (மலைபடுகடாம்) "கலம் பெறு கண்ணுள ரொக்கற்றலைவ" (50-வரி) என நின்ற ஒருமைச்சொற்போய் "இரும் பேரொக்கலொடு பதமிகப் பெறுகுவீர்" (157—வரி) என்னும் பன்மைச் சொல்லோடு முடிந்தவாறு கண்டு கொள்க.

> முன்னிலை சுட்டிய வொருமைக்கிளவி
> பன்மையொடு முடியினும் வரைநிலையின்றே
> ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்" (462)

ஈண்டு, ஒருமைக் கிளவி எனப் பொதுவாக இருப்பினும், இதற்கு முன்னுள்ள நூற்பாவில் பெயர்நிலைக்கிளவி என வரும் அதிகாரத்தால் பெயர்ச்சொல்லையே கொள்க என்றும் 'செய்யுள்' என விதந்து கூறாது 'ஆற்றுப்படை' எனப் பொது வகையாற் கூறியதால் இந்நெறி வழக்கிற்கும் ஒக்கும் என்றும் சேனாவரையர் கூறியதை நோக்குக.

(தொடரும்)

பொன் மொழிகள்

(மு. வ)

தலைமை

தலைமை உன்னைத் தேடிக்கொண்டு வந்தால் வரட்டும். நீ அதைத் தேடிக்கொண்டு போய் அலையாதே. நீ தேட வேண்டியது தொண்டு. தலைமை தாங்குவதும் ஒரு வகை தொண்டுதான். தன்னலமற்றவர்க்கு அது பொறுப்பும் சிக்கலும் மிகுந்த தொண்டு. அத்தகைய தலைமைப் பொறுப்பு எப்போதாவது உன்னை நாடி வந்தால் ஏற்றுக் கொள். ஆனால் தொண்டுக்கு முந்தி, தலைமைக்குப் பிந்தி என்பது உன் நெறியாக இருக்கட்டும்.

சொன்னபடிச் செய்ய—?

இந்த நாட்டில் சொன்னபடிச் செய்ய ஆள் இல்லை. ஆனால் கண்டபடிச் சொல்ல ஆள் ஏராளம். ஒவ்வொரு வரும் ஆணையிடுவதற்கு விரும்புகிறார்கள். அடங்கி யொழுகுவதற்கு யாரும் இல்லை. அதனால் தான் வீழ்ச்சி நேர்ந்தது. ஆகையால் பொதுநலத்திற்காகக் கட்டுப்படுதல், கீழ்ப்படிதல், தொண்டு செய்தல் இவற்றைப் பெருமையாகக்கொள்.

பலரையும் பிணைக்கும் மனம்

பொதுத் தேவையை முதன்மையாக எண்ணும் மனம் தான் பலரையும் பிணைக்க முடியும். தன்னையே முதன்மை யாக எண்ணும் மனம் சேர்ந்தவர்களையும் பிரிக்கவே முயலும்.

பெரும்பாலோரின் மானம்

தமிழரில் உண்மையான மானமுடையவர்கள் இருக்கிருர்கள். ஆனுல் மிகச் சிலரே. பெரும்பாலோர் எப்படிப் பட்ட மானத்தைப் போற்றுகிருர்கள் தெரியுமா? தன் மனைவி கற்போடு வாழுமாறு அவளை அடக்கியாள்வதில் வீரமும், மானமும்; ஆனுல் தான் கற்போடு வாழுமாறு தன்னைக் காத்துக்கொள்வதில் அவை இல்லை. மனைவி கற்பு தவறியதாக ஐயுற்ருல் அவளை அடிப்பதில் வீரம், கொல்வதில் மானம்; தன்னைவிட வலிமை குறைந்தவரைப் பழிப்பதிலும் பகைப்பதிலும் வீரமும் மானமும். ஆனுல் தம்மவரைப் பழித்துப் பிறர்க்குக் காட்டிக்கொடுத்து வயிறு வளர்ப்பதில் அவை இல்லை.

வேறுபாடு என்ன?

பழங்காலத்தில் காலட்சேபங்கள், உபங்யாசங்கள்; இக்காலத்தில் பொதுக்கூட்டங்கள், மாநாடுகள். இவ்வளவு தான் வேறுபாடு. பழங்காலத்தில் உருக்கமாகக் கேட்டு விட்டு, வீட்டுக்குப்போய்ப் பழைய இரக்கமற்ற வாழ்க்கையையே நடத்திவந்தார்கள், இக்காலத்தில் உணர்ச்சியோடு கேட்டுவிட்டு, வீட்டுக்குப்போய்ப் பழைய கவலையற்ற வாழ்க்கையையே நடத்திவருகிருர்கள்.

மேடைப் பேச்சு

மேடைப் பேச்சு நமது உணர்ச்சி வெள்ளத்திற்குப் பெரிய வாய்க்காலாக இருந்து ஆத்திரத்தைத் தணித்து வற்றச் செய்து நம்மைச் சோம்பேறிகளாக்கிவிடுகிறது.

வாய்ச் சொல்

கொள்கை எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் சொல்கின்றவர்கள் யார் என்ற ஆராய்ச்சியும் வேண்டும். யாழின் கொம்பு வளைவானது, அம்பு நேரானது ஆனால் யாழை வெறுத்து அம்பைப் போற்றுவது அறியாமையல்லவா? திருவள்ளுவர்தான் இந்த உவமையைச் சொன்னவர். வாய்ச் சொல் நேர்மையானதாக இருக்கலாம். அதைக்கொண்டு ஒருவரை நம்பிவிடக் கூடாது. அவருடைய வாழ்க்கை எப்படிப்பட்டது என்று ஆராய்ந்த பிறகே நம்ப வேண்டும்.

தமிழனின் இன்றைய தேவை

இன்று மக்கள்தொகையின்வன்மையே உலகை ஆளத் தொடங்கியிருக்கிறது. ஆகவே இன்று வேண்டியவை ஒற்றுமையான மக்களின் எண்ணிக்கையும், சட்டம் செய்யும் ஆற்றலுமே. அதனால் தமிழர் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாய்த் திரண்டு தொகைவன்மையைப் புலப்படுத்தினால்தான் வெற்றிபெற முடியும். இதை மறந்து வீரத்தையும், மானத்தையும், பழம்பெருமையையும் நினைத்துக் கொண்டிருந்தால் ஒரு பயனுமில்லை. இன்று நம்மை எதிர்ப்பவை யானையும், குதிரையும் அல்ல; வாளும் வேலும் அல்ல; பிறருடைய தொகையும் சட்டமுமேயாகும். ஆகவே பழைய வீரமும் மானமும் இன்று பயன்படாதவை; ஒற்றுமை ஒன்றே இன்று பயன்படுவது.

சங்கச் செய்திகள்:

இரங்கற் கூட்டம்

தமிழவேள் திரு. பி. டி. இராசன் (சங்கத் துணைத் தலைவர்) அவர்கள் தலைமையில் 24-4-61 அன்று தமிழ்ச் சங்கச் செயற்குழுக்கூடித் தமிழ்ப்பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை, சங்கச் செயற்குழு வுறுப்பினர் திரு. இராமசாமி ஐயங்கார் ஆகியவர்களின் மறைவு குறித்து இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றியதுடன் இது குறித்துச் சங்கத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்தது.

அம்முடிவின்படி 3-5-61 அன்று மாலை 6 மணிக்குத் திரு. பி. ரெங்கசாமி நாயுடு (சங்கச் செயற்குழுவுறுப்பினர்) அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு. கி. பழநியப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்றனர். பிறகு திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் பண்டித திரு கந்தசாமிப் புலவர் (கழகச்செயலாளர்) அவர்களும், பாரதி இலக்கியக் கழகத்தின் சார்பில் திரு. சாமிநாதன் (பாரதி புத்தக நிலைய உரிமையாளர்) அவர்களும், தமிழாசிரியர்கள் சார்பில் பண்டித. திரு. முத்துசாமிப் புலவர் அவர்களும், தமிழ்ப் பேராசிரியர்களின் சார்பில் திரு. அ. கி. பரந்தாமனார் அவர்களும், தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்க் கல்லூரியின் சார்பில் திரு அன்பு. கருணையானந்தா அவர்களும் வழக்கறிஞர்களின் சார்பில் திரு. முகமது சுல்தான் அவர்களும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் டாக்டர். திரு. துரையரங்கனார் அவர்களும் மதுரை எழுத்தாளர் மன்றத்தின் சார்பில் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்களும் பொதுமக்கள் சார்பில் திரு. இராமச்சந்திர பத்தர் அவர்களும் சொற்பொழிவு செய்தார்கள். அவ்வமயம் அவர்கள் அனைவரும் பேசியதன் சுருக்கம் பின்வருமாறு:-"திரு. சேதுப்பிள்ளை அவர்கள் மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் மிக்க

வர். கேட்போருள்ளத்தைத் தொடும் முறையில் பேசும் ஆற்றல்பெற்றவர். பிறர் நலங்கண்டு பாராட்டும் பெருந்தன்மை மிக்கவர். பிறர் கடிந்துரைப்பினும் இன்சொற் கூறித் திருத்தும் பண்பினர். மனவலிமை உடையவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து 25 ஆண்டுகள் தமிழ்ப் பணியாற்றி அக்கழகத்திற்குப் பெருமை தேடித் தந்தவர் என்ற பெரும் புகழ்பெற்றவர். சென்னை அண்ணுமலை பல்கலைக் கழகங்களுக்குத் தனித்தனி இருபத்தையாயிரம் வெண்பொற்காசுகளைத் தமிழாராய்ச்சிக்கென நன்கொடையளித்த தன் மூலம் தமிழால் பெற்ற செல்வத்தைத் தமிழுக்கே தந்த பெருங் கொடைவள்ளல். ஊரும்பேரும், தமிழின்பம் வள்ளுவர் நூல் நயம் முதலிய ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதியதோடு அரசாங்கப் பரிசும்பெற்றவர். இத்தகைய பல்வேறு நலங்களைப்பெற்றுத் திகழ்ந்த சேதுப்பிள்ளையவர்கட்குத் தமிழர்கள் பல்வகையிலும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். அவருக்குச் சென்னை பல்கலைக் கழகத்தில் ஒரு சிலை செய்து வைத்தலும், அவர் சென்ற வழியைப் பின்பற்றித் தமிழ்த் தொண்டு புரிதலுமே தமிழர்கள் அவருக்குச் செய்யும் கைம்மாறுகளாம்''.

முடிவில் இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதும் கூட்டம் முடிந்தது. (இரங்கல் தீர்மானங்களும் சிலர் பாடிய இரங்கற் பாக்களும் முன்னிதழில் வெளிவந்துள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.)

—**பொறுப்பாசிரியர்.**

சங்கச் செய்திகள்

மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வு முடிவுகள்

*1961*ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தனித் தமிழ்த் தேர்வு முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன. புலவர் நுழைவு, இளம்புலவர், புலவர் ஆகியவற்றில் வெற்றிபெற்றோரின் எண்கள் இவைகள்:—

புலவர் நுழைவு:—

முதல் வகுப்பு:— 115.
இரண்டாவது வகுப்பு:— 116—18, 128.
மூன்றாவது வகுப்பு:— 123, 26, 29-எ, 36.

இளம் புலவர்:—

இரண்டாம் வகுப்பு:— 174, 75, 229, 42, 60, 61, 302, 06, 07, 14, 15, 17, 22, 27, 29.

மூன்றாம் வகுப்பு:— 137—48, 50, 52—58, 60—62, 64—71, 76—80, 81, 83—91, 94, 96, 97, 202—15, 17—28, 30—41, 45 48, 49, 51—53, 55—59, 62—68, 70—74, 76. 77, 79, 81, 85, 92—301 03—05, 09—13, 16, 18—21, 24, 25, 30—32, 33-ம்.

புலவர்:—

முதல் வகுப்பு

382	கு. சரசுவதி	மயிலம்
421	யூ. ஹாஜாஹிதுதீன்ஷா	மேலச்சிவபுரி
431	கே. தெய்வேந்திரன்	மதுரை

இரண்டாம் வகுப்பு

359	கு. சின்னுசாமி	மயிலம்
380	கொ. பூமிநாதன்	,,
387	K. மீனுட்சி சுந்தரம்	திருப்பனந்தாள்
388	சு. இரத்தினம்	,,
389	கே. சின்னராஜ்	,,
390	P. ஆதிமூலம்	,,
391	S. பொன்னப்பன்	,,
393	கே. திருநாவுக்கரசு	,,
394	கே. என். கோபாலன்	,,
397	P. கோதண்டராமன்	,,
399	R. மதனகோபால்	,,

400	S. சடானனன்	திருப்பனந்தாள்
401	S. முத்து	,,
404	மா. துரைப்பாண்டியன்	,,
415	ம. கணேசன்	மேலைச்சிவபுரி
416	சொ. பிச்சாண்டி	,,
417	மா. சுப்பையா	,,
419	சொ. சண்முகம்	,,
420	அ. தலைக்கான்	,,
422	D. பொன்னுசாமி	மதுரை
426	S. ஆதினமிளகி	,,
433	P. K. மாணிக்கம்	,,
435	கோ. பா. தாமரை	,,
439	பெ. பழநியம்மாள்	,,
444	அ. வே. மங்களேசுவரி	,,

மூன்றும் வகுப்பு

334	இரா. செல்லப்பன்	திங்கள் சந்தை
336	சி. ஸ்டெல்லா ஹெப்சிபா	,,
337	வி. மரியம்மாள்	,,
338	S. அமிர்ததாஸ்	,,
339	அ. இரமணி	,,
346	V. வில்லிபாய்	,,
348	ஜி. ரோசலி	,,
349	A. மேழ்சிபாய்	குழித்துறை
355A	சேசய்யா	வடக்கன்குளம்
355B	Y. தங்கமணி	மயிலம்
356	துரைசாமிராசன்	,,
358	ரெ. சுந்தரராசன்	,,
360	அ. பொன்னுசாமி	,,
361	க. சீனிவாசன்	,,
362	கோ. சுப்பராயன்	,,
363	வ. கேசவன்	,,
364	ச. முருகேசன்	,,
365	பி. எஸ். மல்லையர்	,,
366	வேத. ரகுநாதன்	,,
367	ஆ. இரகுபதி	,,
368	மு. அன்பரசன்	,,
369	அ. சுப்பிரமணியன்	,,
370	அ. அண்ணமலை	,,
371	இரா. கோவிந்தசாமி	,,
372	ந. ஆதிகேசவன்	,,
373	துரை- இராமச்சந்திரன்	,,
374	வெ. வேதாசலம்	,,
375	சு. மீனுட்சி சுந்தரம்	,,
376	அரங்கவேணுகோபாலன்	,,

377	சு, சப்தரிஷி	மயிலம்
378	து. சு. சுசிலா	,,
379	சு. பாக்ஷா	,,
383	நா. விஜயலெட்சுமி	,,
384	மு. பெருமாள்	,,
386	குமாரசாமி (T)	திருப்பனந்தாள்
392	கே. குமாரசாமி	,,
395	R. தமிழ்மணி	,,
396	R. கோவிந்தராசன்	,,
398	R. சின்னையன்	,,
402	M. V. பசுபதி	,,
403	கோ. சஞ்சீவி	மேலைச்சிவபுரி
405	க. செயராமன்	,,
406	பெ. சூசையப்பன்	,,
409	ந. சிவலிங்கம்	,,
410	சு. மூக்கன்	,,
411	ந. பாலசுப்பிரமணியம்	,,
412	அ. மரியசூசை	,,
413	வெ. பெருமாள்சாமி	,,
414	இர. மகபூப்கான்	,,
418	சு. இராசன்	,,
423	S. L. சீனிவாசன்	மதுரை
424	A. P. S. காமாட்சி	,,
425	கே. இராமச்சந்திரன்	,,
427	A. பரமசிவம்	,,
428	கே. பொன்னுராமன்	,,
429	V. கிருஷ்ணன்	,,
436	R. சரோசா	,,
437	ஆ. முனியம்மாள்	,,
438	மு. ஞானம்	,,
442	சு. இராமச்சந்திரன்	,,
447	அந்தோனிசாமி	,,

தமிழ்ச் சங்கம்,
மதுரை.

செயலாளர்.
1—7—61.

செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் தேர்வு முடிவுகள்.

1961ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் நடத்தப்பெற்ற தமிழ் வித்துவான் தேர்வில் வெற்றிபெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களின் எண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

முதனிலை வகுப்பு (Prelimenary) 87%

முதல் வகுப்பு:— 550, 569, 571.

இரண்டாம் வகுப்பு:— 539, 40, 45, 46, 54—59, 61—64, 68, 70, 72, 73.

மூன்றும் வகுப்பு:— 541, 42, 44, 47—49, 52, 60, 65, 67, 74.

முடிவு நிலை வகுப்பு (Final) 95%

1260	எஸ். ஆதினமிளகி	2-ம் வகுப்பு
1262	கே. தெய்வேந்திரன்	,,
1264	ஏ. பி. எஸ். காமாட்சி	,,
1270	டி. பொன்னுசாமி	,,
1277	எஸ். பழநியம்மாள்	,,
1259	எம். அந்தோனிசாமி	3-ம் வகுப்பு
1261	எம். சின்னசாமி	,,
1263	எஸ். செயராமச்சந்திரன்	,,
1265	வி. கிருஷ்ணன்	,,
1266	பி. கே. மாணிக்கம்	,,
1267	ஏ. பரமசிவம்	,,
1268	வி. பெருமாள்	,,
1269	எம். பிச்சாண்டி	,,
1271	கே. பொன்னுராமன்	,,
1272	கே. ராமச்சந்திரன்	,,
1273	எஸ். எல். சீனிவாசன்	,,
1275	எம். ஞானம்	,,
1276	ஏ. முனியம்மாள்	,,
1278	ஆர். சரோசா	,,
1279	கோ. பா. தாமரை	,,

தமிழ்ச் சங்கம்
மதுரை.

செயலாளர்
1—7—61

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	ப
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	களநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	8	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	8	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினவிடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	3	0
32.	மனீஷாபஞ்சகம்	—	0	8	0
33.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜனி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0
72.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்	—	2	0	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7. 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 விதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A, Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.